# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மல்வத்து மகா விகாரிய திப்பட்டுவாவை சிறீ சித்தார்த்த சுமங்கல மனித நேய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(2008 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 5 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2008, ஓகத்து மாதம் 8 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

விலை : ரூபா 10.00 தபாற் செலவு : ரூபா 5.00

## 2008 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மல்வத்து மகா விகாரிய திப்பட்டுவாவை சிறீ சித்தார்த்த சுமங்கல மனித நேய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 5 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது]

ச.வ.ஓ. கூட் 16/2005

முன்னுரை.

"மல்வத்து மகா விகாரிய திப்பட்டுவாவை சிறீ சித்தார்த்த சுமங்கல மனிதநேய மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப் படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கு அமைய மேற்கூறப்பட்ட மன்றம் தொடர்பான எல்லாக் கருமங்களையும் காரியங்களையும் பயனுற நிறைவேற்றி கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென, கண்டி மல்வத்து மகா விகாரையில் தாபிக்கப்பட்டிருப்பதனாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

**1.** இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மல்வத்து மகா விகாரிய திப்பட்டுவாவை சிறீ சித்தார்த்த சுமங்கல மனிதநேய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்பட லாம்.

மல்வத்து மகா விகாரிய திப்பட்டுவாவை சிறீ சித்தார்த்த சுமங்கல மனிதநேய மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" என குறிப்பீடு செய்யப்படும்) "மல்வத்து மகா விகாரிய திப்பட்டுவாவை சிறீ சித்தார்த்த சுமங்கல மனிதநேய மன்றத்தின்" தற்போதைய உறுப்பினர்களாக வுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகை யோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத் தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "மல்வத்து மகா விகாரிய திப்பட்டுவாவை சிறீ சித்தார்த்த சுமங்கல மனிதநேய மன்றம்" என்னும் பெயர், மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட

கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கப்படலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றன :—

(அ) பௌத்தத்தின் எல்லா அம்சங்களினதும் கல்வியையும் அவற்றைப் பற்றிய ஆய்வையும் ஊக்குவித்தலும் ஆதரவளித்தலும் மேம்படுத்தலும் ;

(ஆ) பௌத்த மதத்தைச் சேர்ந்த ஆட்களுக்குக் கல்வி புகட்டும் நோக்கத்திற்காக பௌத்தத் மதத்தைப் போதிப்பதற்கென நிறுவனங்களைத் தாபித்தல் மற்றும் பேணுதலுடன் பௌத்த தருமம் மற்றும் பௌத்த பெறுமானங்களை மக்களுக்கு பயிற்றுவித்தல், அத்துடன் அவர்களை பௌத்ததருமம் பௌத்த பெறுமானங்களுக்கிணங்க தமது வாழ்க்கை நெறியை முன்னெடுத்துச் செல்வதற்கு ஊக்குவித்தல் ;

(இ) விகாரைகள், ஆச்சிரமங்கள், துறவிகள் தங்குமிடங்கள், புனித நினைவுச் சின்ன இடம் மற்றும் வேறு சமய நிறுவனங்களை தாபித்தலும் பேணுதலும் ; அத்துடன் பௌத்த விழாக்கள், சமய சடங்குகள், வழிபாட்டு முறைகள், பழக்க வழக்கங்கள் மற்றும் சம்பிரதாயங்களை மேம்படுத்தல் பேணிவளர்த்தல் மற்றும் பேணுதல் ;

(ஈ) தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள பௌத்தர்களுக்கு புலமைப்பரிசில்கள், ஆதாரவூதியம், வெகுமதிகள், சான்றிதழ்கள் மற்றும் ஏனைய பரிசில்களை அளிப்பதுடன் சமுதாயத்தின் எல்லாப் பிரிவினருக்கும் கல்வி வசதிகள் சேவைகளை ஏற்பாடு செய்தல் ;

(உ) பௌத்த பிக்குமாருக்கான பயிற்சியினை மேம்படுத்தல் ;

(ஊ) சமுதாயத்தில் சமாதானத்தை மேம்படுத்தலும் மத, இன, இனத்துவ சாதி ரீதியான ஒற்றுமையைப் பேணுதலும் ;

(எ) சமூக நலன் சேவைகளை ஏற்பாடு செய்வதுடன் பௌத்த சிறியோர், வறியோர், அங்கவீனர், இயலாதோர், வயதானோர், நோயாளிகள் மற்றும் இடம் பெயர்ந்தோரின் சேம நலன், பயிற்சி மற்றும் புனர் வாழ்வளித்தலுக்காக சமூகநல நிலையங்கள் மற்றும் நிறுவனங்களைத் தாபித்தல் மற்றும் பேணுதல் ;

(ஏ) நூலகங்கள், தகவல் நிலையங்கள் மற்றும் மூலவள நிலையங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

(ஐ) பௌத்த இளைஞர்களின் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் ஏதேனும் கைத்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுதல், மற்றும் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கு கண்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், வேலைக்களங்கள், வகுப்புகள், விவாதங்கள், மாநாடுகள் அல்லது ஏனைய செயற்பாடுகளை நடாத்துதல் ; அத்துடன்

(ஓ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை கொண்டுள்ள வேறுகழகங்கள் ஒழுங்கமைப்புகள் மற்றும் சங்கங்களுடன் கூட்டுச்சேர்தல்.

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமைத்துவம், கட்டுப்பாடு மற்றும் நிருவாகம் என்பன இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமையவும் இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவினால் ஆக்கப்படவுள்ள விதிகளின் ஏற்பாடுகளுக்கமையவும் பதவி தாங்குதநர்கள் மற்றும் பிரிவு 5 இன் கீழான விதிகளுக்கிணங்க தெரிவு செய்யப்படும் அத்தகைய வேறு ஆட்களையும் கொண்ட (இதனகத்துப் பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆளும் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

(2) இப்பிரிவின் ஓராம் உட்பிரிவின்கீழ் உள்ளடங்கியுள்ளது எது எப்படியிருப்பினும், இச்சட்டம் தொடங்குகின்ற தேதியில் பதவி வகிக்கின்ற இம்மன்றத்தின் தாபக தலைவர் கூட்டுத்தாபனத்தின் முதலாவது தலைவராக இருத்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது தலைவரின் இறப்பின் பின்னர், மல்வத்து பீடத்தின் அடுத்துறும் மகா நாயக்க தேரர் கூட்டுத்தாபனத்தின் அடுத்த தலைவராவார் என்பதுடன் இதே நடவடிக்கைமுறை வருங்காலத்திலும் பின்பற்றப்படுதலும் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபை, இச்சட்டம் தொடங்கும் திகதியன்று பதவி விகிக்கின்ற மன்றத்தின் ஆளும் சபை உறுப்பினர்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

5. (1) காலத்துக்குக்காலம், கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டும் பின்வரும் கருமங்களுக்காக இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், உறுப்பாண்மையை வகைப்படுத்தல், உறுப்பினர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) பதவி தாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர் தமது பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும் அவர்களின் தத்துவங்களும், நடத்தைகளும் கடமைகளும் ;

(இ) சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் அதன் தத்துவங்களும், சபை உறுப்பினர்களின் ஒழுக்கமும், கடமைகளும் பதவிக்காலமும் ;

(ஈ) சபையின் கூட்டங்களில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறையும், அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும்,

இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும், அதில் கருமமாற்றுதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிர்வகித்தலும் முகாமை செய்தலும் ; அத்துடன்

(ஊ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் அதே போன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் விதியொன்று ஆக்கப்படுவதைப் போன்று திருத்தப் படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) இச்சட்டம் செயற்பாட்டுக்கு வருவதன்மேல் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தினால் காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய வங்கிக் கணக்குளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் உள்ளடங்கலாக கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையேனும் ஒன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு, நன்கொடைகள் ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள், கட்டணங்கள் அல்லது வழங்கல்களாக இதற்கு முன்னர் கிடைத்த அல்லது இதனகத்துப் பின்னர் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும், சபையினால் தீர்மானிக்கவேண்டியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலிலும் நிறைவேற்றுவதிலும் புரிதலிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் தேவைப்படுகின்றவாறான எல்லாச் செலவினங்களும் நிதியதிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் பணங்களும் மற்றும் ஆதனங்களும் அவை எவ்வாறு பெறப்பட்டிருப்பினும் இத்தால் தரப்பட்டுள்ள குறிக்கோள்களை ஊக்குவிப்பதற்காக மாத்திரமே பிரயோகிக்கப் படவேண்டும் என்பதுடன் அதன் பாகம் எதுவும் பங்குலாபம், பணிக்கொடை என்ற வகையிலோ அல்லது எத்தன்மையதுமான வேறு வகையிலோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் ஆகாது.

மன்றத்தினால் செலுத்தப்படற்பாலனவையும் மன்றத்திற்கு செலுத்தப்படற்பாலனவையுமான கடன்கள்.

**8.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலுள்ளவாறான, மன்றத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அன்றைய தினம் மன்றத்துக்குக் கிடைக்கவேண்டிய எல்லாக் கடன்கள், ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் என்பன யாவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

**9.** கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறேதேனும் விதமாகக் கிடைக்கக்கூடிய ஏதாவது அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலக்கூடியதாகவும் தகுதியுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனங்களை இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக்

கொடுக்க, கொடுத்த மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள முழுத் தத்துவத்துடன் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர்; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று

என்று பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபன விதிகளினால் ஏற்பாடு செய்யக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர் முன்னிலையன்றி எத்தகையதுமான சாதனத்திலும் பொறிக்கப்படுதலாகாது. அத்துடன் அவர்

கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சானத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுவது, எவரேனுமாள் சாட்சிக்காரராக கையொப்பமிடுவதிலிருந்து தனிவேறானதாதல் வேண்டும்.

கலைக்கப்பட்ட தன்மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர், எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பங்களித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் மொழி உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்